IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:199/2013

**DEP OF WITNESS: PW1**

NAME: Muhamad Jahim RELIGION:

FATHER NAME: CASTE:

VILLAGE: OCCUPATION:

TALUK: AGE:

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 26-11-2018

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

இந்த வழக்கை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கெதிராக தான் எனது தகப்பனார் தாவா தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தின் பேரில் பரிகாரம் ஏதேனும் கோரியுள்ளோமா என்றால் இல்லை. எருகம்பட்டு கிராம சர்வே எண்.சர்வே எண்.12/1ல் 1.65 ஏக்கர், சர்வே எண்.12/2 3.90 ஏக்கர், சர்வே எண்.12/3 3.71 ஏக்கர் ஆகிய சொத்துக்களை 1-ம் பிரதிவாதியும் அவரது மனைவி பானுமதி கிரயம் வாங்கியுள்ள சொத்துக்களில் நாங்கள் உரிமை ஏதேனும் கொண்டாடுகிறோமா என்றால் இல்லை. மேற்படி 3 சர்வே எண்கள் கொண்ட சொத்துக்களின் வழியாக வழி பாத்தியம் கோருகிறோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனது அப்பாவிற்கு தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணங்களில் மேற்படி சர்வே எண்.12/1,2,3 ஆகிய 3 சொத்துக்களின் வழியாக வழி பாத்தியம் உண்டு என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு எழுதப்படவில்லை போய்வர பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் எந்தெந்த சர்வே எண்கள் கொண்ட சொத்தின் வழியாக போய்வர வழி பாத்தியம் இருப்பதாக சொல்லியுள்ளோமா என்றால் சர்வே எண்.9/2எ, 9/2பி, 11/2சி ஆகிய சொத்துக்களின் வழியாக வழிபாத்தியம் உள்ளதாக சொல்லியுள்ளேன். மேற்படி சர்வே எண்.9/2எ, 9/2பி, 9/2சி ஆகிய சொத்துக்களை 1-ம் பிரதிவாதி லோகநாதன் அவரது மனைவி பானுமதியும் மற்றும் 2-ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் கிரயம் வாங்கியுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.3/4பி, 4/2 ஆகிய சொத்துக்கள் வழியாகவும் வழிபாத்தியம் கோரியுள்ளேன். சர்வே எண்.13/3 31 செண்ட் வழியாகவும் வழிபாத்தியம் கேட்டுள்ளேன். நாங்கள் சொல்லும் வழிபாத்தியமானது எந்தெந்த சர்வே எண் வழியாக செல்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்லும் அந்த வழி பாதையானது எந்தெந்த சர்வே எண் வழியாக எவ்வளவு அகலம், எவ்வளவு நீளம் மற்றும் அதற்கு செக்குபந்தி விவரம் தெரியுமா

என்றால் தெரியாது. தமிழில் எனக்கு எழுத படிக்க தெரியாது. ஆங்கிலத்தில் தான் எழுத படிக்க தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலமானது தமிழில் தான் உள்ளது. அந்த வாக்குமூலம் தமிழ் மொழியில் தான் உள்ளது என்பதை எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் எனக்கு தமிழில் ஓரளவிற்கு எழுத படிக்க தெரியும். வாக்குமூலத்தில் உள்ள படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை படித்து காண்பித்ததை தெரிந்துகொண்டேன். எனக்கு தெரிந்தவர்கள் மூலமாக நான் படித்து தெரிந்துகொண்டேன். அந்த வாக்குமூல அபிடவிட்டில் என்ன உள்ளது என்று படித்து காண்பித்தவர் மூலம் தெரிந்துகொண்டேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 1-ம் அயிட்ட சொத்து சர்வே எண்.11/2, 4 ஏக்கர் சொத்துக்கு மரியம்பீ பாக நிலத்தில் நுழைந்து வண்டி வழி பாத்தியம் உட்படவும் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதில் அந்த வண்டி வழி பாதையானது செல்லும் சர்வே எண்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா 2,3 அயிட்ட சொத்துக்களுக்கு சர்வே எண்.3/4, மற்றும் 4 நெம்பர் நிலங்களின் வழியாக வழிபாத்தியம் உள்ளதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். நான் ஏற்கனவே சொல்லியுள்ள சர்வே எண் 12/1,2,3 மற்றும் சர்வே எண்.13/3, சர்வே எண்.9/2எ,9/2பி,9/2சி சர்வே எண்.11/2சி சொத்துக்கள் வழியாக வழி பாத்தியம் இருப்பதாக வழக்குரையிலும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்திலும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களிலும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் நிலங்களின் வழியாக வழி பாத்தியம் உள்ளதாக குறிப்பிட்டுசொல்லப்படவில்லை என்றால் சரிதான் அமினாபீ என்று சொல்லியுள்ளோம். நான் சொல்லும் மரியம்பீ மற்றும் அமினாபீீ ஆகியோரை இந்த வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளீர்களா என்றால் இல்லை. பிரதிவாதிகளுடைய சொத்துக்களின் வழியாக வழி பாத்தியம் இருப்பதாக தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லும் போகவர பயன்படுத்துவதாக சொல்லும் வழி பாத்தியமானது சர்வே எண்.13/3-ல் உள்ளது. நான் சொல்லும் மேற்படி சர்வே எண்13/3 ஆனது தாவா சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/ Muhamad Jahim (PW1)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 26.11.2018.
District. Munsit.